2012 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அ.இ.அ.தி.மு.கழகத்தினுடைய பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, நான் இந்த முதல் கேள்வியை கேட்க அனுமதித்ததுடன், அந்தக் கேள்வியிலும் சரியான பதிலைச் சொல்லி, எங்களுடைய தொகுதி மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியைச் சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

மீன் பதனிடும் நிலையம்

***3236—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு மீன் வளத் அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதியில் மீன் பதனிடும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்மிடிப்பூண்டி தொகுதியில் மீன் பதனிடும் நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

அவ்வாறு கருத்துரு பெறப்படும்போது, இப்பகுதியில் இந்நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மாவின் அரசினால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முதல் கேள்வி, மீனவ மக்களின் வாழ்வாதாரம் உயரும் என்கிற கேள்வியாக வந்திருப்பதால் எனக்கு மிகவும் சந்தோஷம் அளிக்கிறது. கும்மிடிப்பூண்டி தொகுதிக்குட்பட்ட ஆரம்பாக்கம், சுண்ணாம்புகுளம், மெதிப்பொலியம் ஆகிய மீனவ ஊராட்சிகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 10,000 மீனவ மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் இறால் மற்றும் நண்டு இங்கேதான் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகையால், இங்கு மீன் பதனிடும் நிலையம் அமைத்தால் இவர்களின் வாழ்வாதாரம் உயரும்; அந்நியச் செலாவணி பெருகும்; அரசுக்கு வருவாயும் பெருகும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் ஏழு மீனவ கிராமங்கள் அமைந்துள்ளன. இக்கிராமங்களில் சுமார் 1,200 மீனவக் குடும்பங்கள் உள்ளன. இந்த மீனவக் குடும்பங்களில் உள்ள மீனவர்கள் அனைவரும் பழவேற்காடு ஏரியில் மட்டுமே முழு நேர மீன்பிடிப்பு செய்து வருகிறார்கள். இக்கிராமங்களில் மொத்தம் சுமார் 520 மரப் படகுகளும், சுமார் 100 கண்ணாடி இழைப் படகுகளும் உள்ளன. இங்கு பிடிக்கப்படும் மீன்களில் பெரும்பாலானவை இறால் வகை மீன்கள் மட்டுமே. பெரு இரக மீன்கள் பிடிபட வாய்ப்பில்லை. இக்கிராமங்கள் அனைத்தும் சேர்ந்து நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக ஒரு டன்னுக்குக் குறைவான இறால் மீன்கள் மட்டுமே பிடிக்கப்படுவதாலும், மாவட்டத்திற்கு அருகே சென்னைப் பெருநகர் அமைந்துள்ளதாலும் பிடிக்கப்படும் மீன்கள் அனைத்தும் அன்றே விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால் பிடிபடும் மீன்களைப் பதப்படுத்தி விற்பனை செய்யவேண்டிய கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு கருத்துரு பெறப்படும்போது, இப்பகுதியில் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அரசினால் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)—ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

(1) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

(2) திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

(3) திரு. கே.பி. அன்பழகன்

(4) திரு. ஆர். சின்னசாமி

(5) திரு. எல். வெங்கடேசன்

(6) திரு. சு. குணசேகரன்